அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 12/2025

எனது இல : EST-6/04/LON/1030

பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.05.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரிவு 10 - இடர்க்காலக் கடன்

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2008.12.31 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 30/2008 மற்றும் 2025.03.22 ஆம் தினத்தன்றான வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் 04.4 ஆம் உபபிரிவிற்கு உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.

02. 2025 வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களின் குறைந்தபட்ச அடிப்படை சம்பள அதிகரிப்பினை கவனத்திற் கொண்டு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தற்போது காணப்படும் இடர்க்காலக் கடன் ரூபா 250,000/- இருந்து ரூபா 400,000/- வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03. மேற்படி ஏற்பாடுகளின்படி, உத்தியோகத்தருக்கு உரித்தாகும் கடன் பணத்தினை தீர்மானிக்கும் போது உத்தியோகத்தரின் சம்பளமாக 2025.03.25 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025இன் அட்டவணை II இன் அடிப்படை சம்பளத்திற்குரியதாக்கி உத்தியோகத்தருக்கு அடுத்த பத்து மாதத்திற்கான சம்பளம் அல்லது ரூ. 400,000/- அல்லது இரண்டில் குறைந்த பணத்தினை செலுத்த வேண்டும்.

04. அதன்படி, உத்தியோகத்தரொருவர் கடன்/ முற்பணத்தினை பெற்றுக் கொள்ளும் போது கவனத்தில் எடுக்கப்படும் சம்பளத்தில் 40% எல்லையை கணீப்பீடு செய்யும் போது உத்தியோகத்தரின் சம்பளமாக 2025.03.25 ஆம் தினத்தன்றான

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் II ஆம் அட்டவணையின் அடிப்படை சம்பளத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல் வேண்டும்.

05. மேலும், இடர்காலக் கடன் பணத்தினை மீள அறவிடும் போது அடிப்படையாகக் கொள்ள வேண்டிய சம்பளமாக 2025.03.25 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் II ஆம் அட்டவணையின் அடிப்படை சம்பளத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல் வேண்டும்.

06. அங்கு, நிலவும் அதிகபட்ச எல்லையினை மீறிச் செல்லாத வகையில் மற்றும் ஆண்டிற்குள் கடன் வழங்குவதற்கு இயன்ற வரையில், பொருத்தமான முதன்மை ஒழுங்குவரிசையை அவ்அவ் தாபனங்களின் மூலம் தயாரிக்கப்படல் வேண்டும்.

07. இவ் ஏற்பாடுகள் 2025.05.01 ஆம் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

08. இச்சுற்றறிக்கை பொதுத் திறைச்சேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 011-2699399
தொலைநகல் இலக்கம் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk